இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 30-10-2025


# அவசரமான சதிச் செயல்!

தமிழ்நாடு உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் டெல்லியில் நேற்று (அக்டோபர் 27) பேட்டி அளித்துள்ளார்.

“வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின் (Special Intensive Revision - SIR) இரண்டாம் கட்டம் தொடங்கப்படும். அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா, அசாம், குஜராத், மத்திய பிரதேசம், லட்சத் தீவு, புதுச்சேரி உட்பட மொத்தம் 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்ட ‘SIR’ பணி மேற்கொள்ளப்படும்” என்று அறிவித்திருக்கிறார் தலைமை தேர்தல் ஆணையர்.

**தேர்தல் ஆணையம் தனது சதிச் செயலை அவசர அவசரமாக அரங்கேற்றத் தொடங்கிவிட்டது என்பதையே தேர்தல் ஆணையரின் அவசரப் பேட்டி உணர்த்துகிறது.**

நேர்மையான தேர்தலை நடத்த உண்மையான வாக்காளர் பட்டியல் அவசியம் என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதற்கான உரிய கால அவகாசம் கொடுக்க வேண்டும். பதற்றம் இல்லாத சூழலில்தான் அதனைச் செய்ய வேண்டும். செய்ய முடியும். மாறாக, **தேர்தலுக்கு சில மாதங்கள் இருக்கும் நிலையில் முழுமையான திருத்தப் பணிகள் செய்ய நினைப்பது, உண்மையான வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம் மட்டுமே. அதனைத்தான் பீகாரில் செய்தார்கள். மற்ற மாநிலங்களிலும் செய்ய நினைக்கிறார்கள்.**

“வரவிருக்கும் தேர்தல்களுக்கு முன்னர் வாக்காளர் பட்டியலின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காக, அதில் உள்ள இரட்டைப் பதிவுகளை நீக்குதல், பிழைகளைச் சரிசெய்தல் மற்றும் தகுதியற்றவர்களை நீக்குதல் ஆகியவற்றை இந்தத் திருத்தப் பணி நோக்கமாகக் கொண்டுள்ளது. அரசியல் கட்சிகள் வாக்காளர் பட்டியலின் தரம் குறித்து தொடர்ந்து கேள்விகளை எழுப்பி வருவதால், ஒவ்வொரு தேர்தலுக்கு முன்னரும் இந்த சிறப்புத் தீவிர திருத்தப் பணி (SIR) மேற்கொள்வது அவசியம்” என்று தலைமைத் தேர்தல் ஆணையர் நல்ல பிள்ளையைப் போலச் சொல்லி இருக்கிறார். அவரே பீகார் கோளாறுகள் குறித்து எந்த முறையான விளக்கத்தையும் இதுவரை சொல்லவில்லை. உச்சநீதிமன்றம் கேட்ட கேள்விகளுக்கும் பதில் சொல்லவில்லை. விளக்கம் அளிக்கவில்லை.

வாக்காளர் பட்டியல் சீர்திருத்தமானது 1951ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை 8 முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடைசியாக 21 ஆண்டுகளுக்கு முன்னர் 2002-2004 காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. அப்போது எல்லாம் இதுபோன்ற சீர்திருத்தம் பல மாதங்கள் நடக்கும். இப்போது நடத்துவது போல தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு நடத்துவது போல நடத்தப்பட்டது இல்லை. 21 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை என்பதற்காக அதனை 2 மாதங்களுக்குள் நடத்துவது சரியா? 21 ஆண்டுகளாக நடத்தாதது தேர்தல் ஆணையத்தின் தவறா? வாக்காளர்களின் தவறா?

12 மாநிலங்களில் நவம்பர் 4 ஆம் தேதி முதல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கெடுப்பு தொடங்கும். வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணியில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு உடனடியாக பயிற்சி அளிக்கப்படும். வரைவு வாக்காளர் பட்டியல் டிசம்பர் 9ஆம் தேதி வெளியாகும். சிறப்பு தீவிர திருத்த பணிகள் முடிக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 7-ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார். ஏப்ரல் மாதம் தேர்தலை வைத்துக் கொண்டு இதனைச் செய்ய முடியுமா? அரசு ஊழியர்களை ‘சிட்டி ரோபா’வாக நினைக்கிறதா தேர்தல் ஆணையம்?

பருவமழைபெய்துகொண்டிருக்கிறது. இயல்புவாழ்க்கைசிரமங்களுக்கு மத்தியில் வாக்காளர் பட்டியல் சீரமைப்பு எப்படி சாத்தியம் ஆகும்? இதைப் பற்றி எல்லாம் மாநில அரசிடம் கேட்டதா தேர்தல் ஆணையம்? இல்லை.

**தேர்தல் ஆணையர் பேட்டி அளித்த அதே நாளில் சென்னையில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டினார்கள். SIR என்ற பெயரில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித் திட்டத்திற்கு எதிராக போராடிட தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்கள். வருகிற நவம்பர் - 2 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில் பங்கேற்றிட ‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி’த் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.**

**“நவம்பர், டிசம்பர் மாதங்களில் இதுபோன்ற பணிகளை நடத்துவது என்பது மிகமிகச் சிரமம் ஆகும். வடகிழக்கு பருவமழை பெய்து வரும் காலத்தில் வாக்காளர் பட்டியல் குறித்த இதுபோன்ற மிகப்பெரிய பணிகளைச் செய்வது சிரமம் ஆகும். நடைமுறை சாத்தியம் இல்லாத காலத்தை தேர்தல் ஆணையம் தேர்வு செய்துள்ளது. புகைப்படம் ஒட்டித் தர வேண்டும், பழைய வாக்காளர் பட்டியலை இணைய தளத்தில் பார்த்து இணைக்க வேண்டும் என்று சொல்வது எல்லாம் பெரும்பான்மை வாக்காளர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும். உச்சநீதி மன்றம் உத்தரவிட்ட பிறகும் ஆதார் அட்டையை முழுமையான ஆவணமாக ஏற்க மறுப்பது ஏன்? குடும்ப அடையாள அட்டைகளை முழுமையான ஆவணமாக ஏற்க வேண்டும் என்று நாங்கள் இதுவரை வைத்த கோரிக்கையை ஏற்க மறுப்பது ஏன்?”** என்று மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கை எழுப்பும் கேள்விக்கு தேர்தல் ஆணையர் பதில் சொல்வாரா?

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சதித்திட்டம் இந்த வாக்காளர் சிறப்புச் சீர்திருத்த திட்டம் என்பதில் சந்தேகமில்லை. அதனால் தான் அவசரமாகச் செய்கிறார்கள்.

**நேரடியாக மோத முடியாத பா.ஜ.க., தேர்தல் ஆணையத்தை முகமூடியாகப் பயன்படுத்தி மோத வருகிறது. பா.ஜ.க. எதைச் செய்தாலும் அது தமிழ்நாட்டை பழிவாங்குவதாகத்தான் இருக்கும் என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள்.**

**சதிக்கு மேல் சதி செய்யுங்கள். சரிவுக்கு மேல் சரிவைச் சந்தியுங்கள்.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.10.2025) அதிகாலையில் சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மிகப்பெரிய எல்.ஈ.டி கண்காணிப்பு திரைகளில் வெவ்வேறு சுரங்கப் பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுகின்றதா என்று சுரங்கப்பாதைகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் மூலம் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### மழைப் பொழிவு: சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் செயல்படும்

# கட்டளை - கட்டுப்பாட்டு மையத்தில் திடீர் ஆய்வு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!

**சென்னை, அக்.30-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் அதிகாலையில் சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் திடீராய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு நகரின் பல்வேறு பகுதிகளில் பெய்யும் மழையின் அளவு, கண்காணிப்பு கேமராக்கள் மூலம் சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து, மாநகராட்சிக்குட்பட்ட கல்வாய்களில் நீர்மட்டம், ஆறுகள் கடலுடன் கலக்கும் முகத்துவாரத்தில் உள்ள நிலவரம் குறித்து 24 மணி நேரமும் கண்காணித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட நிலையில் நேற்று முன்தினம் (28.10.2025) அதிகாலையில் சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் திடீராய்வு மேற்கொண்டார்.

கட்டுப்பாட்டு அறைக்கு 1913 தொலைபேசி மூலமாக வந்த புகார்கள், புகார்களின் விவரங்கள் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளதா என்றும், எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது துணை முதலமைச்சர் அவர்கள் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்திற்கு சமூக வலைதளங்கள் மூலமாக வரப்பெற்ற புகார்களின் எண்ணிக்கை, புகார்களின் விவரங்கள், புகார்தாரர்கள் அனுப்பிய புகைப்படங்கள், வீடியோக்கள் ஆகியவற்றையும், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும், நடவடிக்கை மேற்கொள்ள எடுத்துக் கொண்ட நேரம், சீரமைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது குறித்து புகார்தாரர் தெரிவித்த கருத்துகள் ஆகியவற்றை கணினியில் பார்வையிட்டும், கணினியில் சமூக வலைதள புகார்களை கையாளும் பணியாளர்களிடம் கலந்துரையாடியும் ஆய்வு மேற்கொண்டார்.

புகார்கள் குறித்து சம்மந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த மாநகராட்சி அலுவலர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றும், அலுவலர்கள் புகாரை சரிசெய்ய எடுத்துக் கொண்ட காலஅளவு குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மழை அதிக அளவில் பெய்கின்றதா என்றும், வெவ்வேறு சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுகின்றதா என்றும் சுரங்கப் பாதைகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் மூலம் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து ஒவ்வொரு சுரங்கப்பாதையாக பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கட்டுப்பாட்டு அறையில் சுழற்சி முறையில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை குறித்தும், பணியாளர்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்தும் விரிவாக கேட்டறிந்தார்.

இந்த ஆய்வில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என். நேரு பங்கேற்பு!

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” ஆலோசனைக் கூட்டம் !

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

*திருச்சி, அக். 30-*

*திருச்சி தெற்கு மாவட்டக் கழக “என் வாக்குச்சாவடி - வெற்றி வாக்குச்சாவடி” ஆலோசனைக் கூட்டம் இன்று (30.10.2025 - வியாழக்கிழமை) மாலை 04.00 மணியளவில் திருச்சி “கலைஞர் அறிவாலயத்தில்” எனது தலைமையில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் - மண்டல பொறுப்பாளர் - அமைச்சர் - கே.என்.நேரு அவர்கள் பங்கேற்று வருகிற 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்குகிறார்.*



*இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநகர, நகர, பேரூர் வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட - மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**பொருள்***:-*

*1. கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ பணிகள் குறித்து .*

*2.கழக ஆக்கப் பணிகள் குறித்து.*

*இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.*



சேலம் அயோத்திய பட்டணம். முன்னாள் சேலம் மாவட்ட தி.மு.க இளைஞரணி அமைப்பாளர் டி.சந்திரசேகரன் .சி.சந்திரா ஆகியோரின் மகன் டாக்டர்.டி.சி. அருள் – ஓசூர்.கே. மோகன்ராஜ். டி.சந்திரா மகள். எம். ரோஷினி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி சேலத்தில் நடைபெற்றது. மணமக்களை கழக அமைப்புச் செயலாளர். ஆர். எஸ். பாரதி, சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர். இரா. இராஜேந்திரன். சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர். டி.எம். செல்வ கணபதி எம்.பி. சேலம் மத்திய மாவட்ட பொருளாளர் மு. கார்த்திகேயன் ஆகியோர் வாழ்த்தினர்.